# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2018. 07. 09 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விஜித ஹேரத் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 34.00 தபாற் செலவு : ரூபா 20.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்

*அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 4 ஆம் உறுப்புரை இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(i) நான்காம் உறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியில், "மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசுச் சனாதிபதியினால்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "குடியரசுச் சனாதிபதியினாலும் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைச்சரவையினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) நான்காம் உறுப்புரையின் (உ) என்னும் பந்தியில், "குடியரசுச் சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலிலும்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**3.** அரசியலமைப்பின் 30ஆம் உறுப்புரை இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(i) முப்பதாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "அரசாங்கத்தினதும்" என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "ஆட்சித்துறையின்" என்னும் சொல்லையும் 30 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் முடிவில்,

''வேண்டும்.'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''வேண்டுமென்பதுடன், அவர் அரசியலமைப்பிற் கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.'' என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(ii) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், ''மக்களினால் தேர்ந்தெடுக்கப்படும்'' என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக, ''இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், பாராளுமன்றத்தினால்'' என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(iii) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், ''பதவி வகித்தலும்'' என்னும் சொற்களுக்கு நேர்முன்னர், ''சாதாரணமாக'' என்னும் சொல்லை உட்புகுத்துவதன் மூலமும்;

(iv) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகங்களை உட்புகுத்துவதன் மூலமும்:

''ஆயின், அரசியலமைப்பில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சனாதிபதியாக அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க அவர் பதவிவகிக்காதொழிந்தால் ஒழிய, அடுத்த பாராளுமன்றத்தினால் சனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஆள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்று கழியவில்லையென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அடுத்த பாராளுமன்றத்தினால் சனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதன்மேல் அவர் பதவி வகிக்காதொழிதல் வேண்டும்.''.

(V) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்; இவை, 30 ஆம் உறுப்புரையின் (3), (4) மற்றும் (5) ஆகிய பந்திகளாகப் பயனுறுதல் வேண்டும்:-

''(3) எண்பத்தெட்டாம் உறுப்புரையின் கீழ் தகைமைபெற்றவரும் 89 ஆம் அல்லது 92 ஆம் உறுப்புரைகளின் கீழ் தகைமையற்றவராக இராதவருமான பிரசையொருவர், (சமுகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம், சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்யக்கூடிய அத்தகைய நடவடிக்கை முறைக்கிணங்க, அதன் முதலாவது அமர்விலிருந்து நான்கு வாரங்களினுள், இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(4) இறப்பின் மூலம், பதவி விலகுவதன் மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாகச் சனாதிபதியின் பதவி வறிதாக வந்தால், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு, இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியின் நியதிகளின் படி, அவ்வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து நான்கு வாரங்களுக்குப் பிந்தாமல் தேர்தலொன்று நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், பதவிக் காலத்தில் எஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் சனாதிபதியின் பதவி வறிதாக வந்தால், மேற்கூறப்பட்டவாறு சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக மட்டும், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஒருவாரத்தினுள், பாராளுமன்றம் சபாநாயகரினால் அழைக்கப்படுதல் வேண்டும்.

(5) சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளொருவர், சனாதிபதியாக அவர் பதவி வகிக்கும் வரை, ஏதேனும் அரசியற்கட்சியில் பதவி வகித்தலோ அல்லது அதன் உறுப்பினரொருவராகவிருத்தலோ ஆகாது.".

*அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையை நீக்கி விடுதல்.*

**4**. அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**5**. அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரை பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அதன் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(ii) அதன் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில், "அமர்வு நிறுத்தல்" என்னும் சொல்லை நீக்கிவிடுவதன் மூலமும்;

(iii) அதன் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் தொடக்கத்தில், "அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்;

(iv) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் முடிவில் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"ஆயின், தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், முழுவுரிமைப் பேற்றுத்தூதர்கள் மற்றும் வேறு இராஜதந்திர முகவர்கள் என்போரை நியமிப்பதிலும் அவர்களுக்குத் தராதர அங்கீகாரமளிப்பதிலும், சனாதிபதியானவர், பிரதம அமைச்சரினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு அமைச்சரவையின் மதியுரையின்மீது செயலாற்றுதல் வேண்டும்.".

அரசியலமைப் பின் 34 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**6**. அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரை பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "இலங்கைக் குடியரசினுள்ளே நீதிமன்றம் எதிலும் எத்தவறுக்காகவும் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டவரான தவறாளி எவரினதும் விடயத்தில், சனாதிபதி-" என்னும் சொற்களை உடனடுத்து, "சனாதிபதி, அமைச்சரவையினால் அவரது விதப்புரை அங்கீகரிக்கப்படுவதற்கமைய,-" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்;

(ஆ) அதன் (2) ஆம் பந்தியில், "எவரேனுமாளின் விடயத்தில்" என்னும் சொற்களை உடனடுத்து, "அமைச்சரவையினால் அவரது விதப்புரை அங்கீகரிக்கப்படுவதற்கமைய,-" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்;

(இ) அதன் (3) ஆம் பந்தியில், "சனாதிபதி" என்னும் சொல்லை உடனடுத்து, "அமைச்சரவையினால் அவரது விதப்புரை அங்கீகரிக்கப்படுவதற்கமைய,-" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்.

அரசியலமைப் பின் 35 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**7**. அரசியலமைப்பின் 35 ஆம் பிரிவு, அவ்வுறுப்புரையின் (3)ஆம் பந்தியில், "சனாதிபதித் தேர்தல் தொடர்பில் அல்லது" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

அரசியலமைப் பின் 37 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**8**. அரசியலமைப்பின் 37 ஆம் உறுப்புரை இத்தாற்றிருத் தப்படுகின்றது:-

(அ) (1) ஆம் பந்தியில், "பிரதம அமைச்சரைச்" என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "சபாநாயகரைச்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) (1) ஆம் பந்தியில், "அத்தகைய காலத்தின்போது பிரதம அமைச்சர் என்ற பதவியில் பதிற்கடமை ஆற்றுதற்கென ஏனைய அமைச்சர்களில் ஒருவரையும் நியமிக்கலாம்:" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(இ) முதலாம் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கி விடுவதன் மூலமும் ;

(ஈ) இரண்டாம் பந்தியில், “சபாநாயகரைக் கலந்தாலோசித்த பின்னர்” என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, “பிரதம அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(உ) இரண்டாம் பந்தியில், “அவரது அபிப்பிராயத்தை அவர் சபாநாயகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் அத்தகைய காலத்தின் போது பிரதம அமைச்சர்,” என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, “அவரது அபிப்பிராயத்தை அவர் பிரதம அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் அத்தகைய காலத்தின்போது சபாநாயகர்,” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஊ) இரண்டாம் பந்தியில், “அத்துடன், இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அத்தகைய நியமனம் எதுவும் செய்யப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், அத்தகைய காலத்தின் போது பிரதம அமைச்சர் என்ற பதவியில் பதிற்கடமை ஆற்றுதற்கெனப் பதில் பிரதம அமைச்சர் சனாதிபதி, அமைச்சரவை உறுப்பினரொருவரை நியமித்தலும் வேண்டும்:” என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(எ) இரண்டாம் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 38 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**9**. அரசியலமைப்பின் 38 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஊ) என்னும் உட்பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்தில், "மூன்றில் இரண்டு" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "அரைவாசிப்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் மற்றும் அந்தப் பகுதியின் இறுதியில், "அல்லது" என்ற சொல்லை அகற்றுவதால்;

(இ) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் (ii) ஆம் விடயத்தை நீக்கிவிடுவதன் மூலமும்;

(ஈ) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில், "மூன்றிலிரண்டு" என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "அரைவாசி" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 39 ஆம் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**10**. அரசியலமைப்பின் 39 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**11**. அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 41 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**12**. அரசியலமைப்பின் 41 ஆம் உறுப்புரை, 41 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான காப்புவாசகமாகப் பயனுற வேண்டிய பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஆயின், அமைச்சரவையானது, அவ்வாறு நியமிக்கப்படக்கூடிய செயலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினர் என்போரின் அதிகபட்ச எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.".

அரசியலமைப் பின் 41இ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.

**13.** அரசியலமைப்பின் 41இ என்னும் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அதன் (1) ஆம் பந்தியில், ''சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின்மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய,'' என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, ''பேரவையின் விதப்புரையின்மீது தவிர,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அதன் (1) ஆம் பந்தியின் முடிவில், ''அத்தகைய நியமனங்களுக்காகப் பேரவையின் விதப்புரையைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள் சனாதிபதி அத்தகைய ஆட்களை நியமித்தல் வேண்டும். அத்தகைய பதினான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் சனாதிபதி அவசியமான நியமனங்களைச் செய்யத் தவறும் பட்சத்தில், அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட ஆட்கள் அத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்டோராகக் கருதப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்.

அரசியலமைப் பின் 42 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**14.** அரசியலமைப்பின் 42 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அதன் (3) ஆம் பந்தியில், ''சனாதிபதி'' என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, ''பிரதம அமைச்சர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அதன் (4) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகங்களைச் சேர்ப்பதன் மூலமும்:-

''ஆயின், அரசியற் கட்சியொன்று பாராளுமன்றத்திலுள்ள ஆசனங்களுள் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டதைப் பெற்றுள்ளவிடத்தும், பெயர் நியமனங்களை அளித்த நேரத்தில் அத்தகைய கட்சி அதன் பிரதம அமைச்

சருக்கான வேட்பாளரைப் பெயர்குறித்து நியமித்திருந்தவிடத்தும் மற்றும் அத்தகைய பிரதம அமைச்சருக்கான வேட்பாளர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளவிடத்தும், சனாதிபதி அத்தகைய ஆளைப் பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.".

(iii) நாற்பத்திரெண்டாம் உறுப்புரையின் (5), (6), (7) மற்றும் (8) ஆகிய பந்திகளாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய பந்திகளை உள்ளடக்குவதன் மூலமும்:-

"(5) பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பிலான நம்பிக்கைப் பிரேரணை, பாராளுமன்றம் சட்டத்தினால் ஏற்பாடு செய்யக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைக் கிணங்க, சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக, அதன் முதலாவது அமர்வில், பாராளுமன்றத்தில் செய்யப்படுதல் வேண்டும்:

ஆயினும், நம்பிக்கைப் பிரேரணையானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையினால் நிறைவேற்றப் படாவிடின் ஏற்கனவே பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவிவகிக்காதொழிதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய நடைமுறைக்கிணங்க அதனுடைய உறுப்பினர்களுள் ஒருவரை பிரதம அமைச்சராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்:

ஆயின், மேலும், இவ்வுறுப்புரையின் (4) ஆம் உட்பந்திக்கான காப்பு வாசகத்தில் குறித்துரைக் கப்பட்ட முறையில் பிரதம அமைச்சர் நியமிக் கப்பட்டிருப்பின், நம்பிக்கைப் பிரேரணை தேவைப்படுதலாகாது.

(6) இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கான முதலாவது காப்பு வாசகத்தின் நியதிகளின்படி உறுப்பினரொருவர் பிரதம அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், அத்தகைய உறுப்பினர், உடனடியாகச் சனாதிபதியினால் சத்தியஞ் செய்விக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேர்தலிலிருந்து ஏழு நாட்களினுள் அவர் சத்தியஞ்செய்விக்கப்படாத பட்சத்தில், அத்தகைய ஏழு நாட்காலப்பகுதியின் முடிவில், பிரதம அமைச்சராக அவர் சத்தியஞ் செய்விக்கப்பட்டவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(7) அரசியலமைப்பிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதம அமைச்சர் அல்லது பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்யப்படவிருப்பவராகக் கருதப்படுபவர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க பதவி வகிக்காதொழியாவிட்டால் அவர் அடுத்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் முடிவின் பின்னர் சனாதிபதியால் பிரதம அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பதவி வகிப்பார்.

(8) சனாதிபதி, எல்லா அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் தீர்மானங்கள் பற்றிய அறிவித்தல்களைப் பெறுவதற்கும் அதன் மீதான தனது அபிப்பிராயங்களை அமைச்சரவைக்கு அனுப்புவதற்கும் உரித்துடையவராவார்.

*அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**15**. அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் பந்தியில், "பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுமிடத்து," என்னும்

சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (3) ஆம் பந்தியில், "சனாதிபதி" என்னும் சொல்லை உடனடுத்து, "பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும் ; அத்துடன்

(3) அதன் (3) ஆம் பந்தியில், "அமைப்பையும்" என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "அமைச்சர்களையும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**16**. அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் பந்தியில், "அத்தகைய கலந்தாலோசனை அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்களின் விடயங்களதும் மற்றும் பணிகளதும் குறித்தொதுக்கல்களையும் தீர்மானிக்கலாம்." என்னும் சொற்களையும் எண்ணையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பில் இருக்கவேண்டிய அமைச்சுக்களின் விடயங்களதும் மற்றும் பணிகளதும் குறித்தொதுக்கல்களையும் தீர்மானித்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் பந்தியில், "சனாதிபதி" என்னும் சொல்லை உடனடுத்து, "பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது" என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலமும்.

**17.** அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரை, (3) ஆம் பந்தியை உடனடுத்து (3அ) என்னும் பந்தியாகப் பயனுறும் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

"(3அ) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரொருவராகவிராத அமைச்சரொருவர் அல்லது பிரதி அமைச்சரொருவர் என்போருக்கெதிராகப் பாராளுமன்றம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றினால், அத்தகைய நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்திலேயே அத்தகைய அமைச்சரானவர் பதவி விலகியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.".

**18.** அரசியலமைப்பின் 48 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப்பின் 48 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது தவிர, இறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அல்லது பதவி துறப்பதன்மூலம் அல்லது வேறுவகையாக" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது தவிர, இறப்பதன்மூலம் அல்லது பதவி துறப்பதன்மூலம் அல்லது வேறுவகையாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (2) ஆம் பந்தியில், "அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களுக்கு முன்னால் "பிரதம அமைச்சர் பதவி துறந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை உட்புகுத்துவதன்மூலமும்; அத்துடன்

(இ) இரண்டாம் பந்திக்கான காப்புவாசகமாகப் பயனுற வேண்டிய பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"ஆயின், இவ்வுறுப்புரையின் நோக்கத்துக்காகப் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து முதல் இரண்டாண்டுகளின்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அது மூன்று தடவைகளில் பாராளுமன்றத்தில் தோல்வியடைந்தால் மட்டும் நிராகரிக்கப்பட்டதாதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 50 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**19.** அரசியலமைப்பின் 50 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்து "பிரதம அமைச்சரினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு, அமைச்சரவையின் மதியுரையின்மீது" என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "சனாதிபதியின்" மற்றும் "சனாதிபதியினால்" என்னும் சொற்கள் அதன் (2) ஆம் பந்தியில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "பிரதம அமைச்சரின்" மற்றும் "பிரதம அமைச்சரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 51 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**20.** அரசியலமைப்பின் 51 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்து "பிரதம அமைச்சரினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு, அமைச்சரவையின் மதியுரையின்மீது" என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**21.** அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில், "சனாதிபதியால்" என்னும் சொல்லை உடனடுத்து "பிரதம அமைச்சரினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு,

அமைச்சரவையின் மதியுரையின்மீது'' என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**22**. அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரை, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், ''அவர் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அவர் நன்னடத்தையுடையவராகவுள்ள காலத்தின்போது அப்பதவியை வகித்தலும் வேண்டும்.'' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) (5) ஆம் பந்தியின் (ஈ) என்னும் விடயத்தில், ''சனாதிபதியினால்'' என்னும் சொல்லை உடனடுத்து ''அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது'' என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலமும்.

அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**23**. அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரை, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், ''அமர்வு நிறுத்தலாம்,'' என்னும் சொல்லை நீக்கிவிடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (1) ஆம் பந்தியில், ''அதன் முதல் கூட்டத்துக்காக நியமித்த தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதி முடிவுறும் வரை'' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலமும்;

(இ) அதன் (3), (4) மற்றும் (6) ஆகிய பந்திகளை நீக்கிவிடுவதன்மூலமும்;

அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**24**. அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரை, அதன் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"ஆயின், உட்பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதி முடிவுற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள் அல்லது மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்தி மனுவொன்று கோப்பிடப்படும் பட்சத்தில், மக்கள் தீர்ப்பு செல்லுபடியானதென உயர் நீதிமன்றம் தீர்மானித்ததிலிருந்து பதினான்கு நாட்களினுள் சனாதிபதியானவர் சட்டமூலத்தைச் சான்றுபடுத்தத் தவறுமிடத்து, மேற்கூறப்பட்ட பதினான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதி முடிவுறுவதன்மேல் சட்டமூலமானது சான்றுபடுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**25**. அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

"ஆயின், பாராளுமன்ற உறுப்பினர்களுள் முழு எண்ணிக்கையினரினதும் மூன்றில் இரண்டு பங்கினர் (சமுகமளிக்காதோருட்பட) அத்தகைய சட்டமூலத்துக்குச் சாதகமாக தமது வாக்குகளை அளித்ததிலிருந்து 28 நாட்களினுள், சனாதிபதி, அத்தகைய ஏதேனும் சட்டமூலத்தை அல்லது ஏற்பாட்டை மக்கள் தீர்ப்பின்மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடுகள், மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.".

**26**. அரசியலமைப்பின் 88 ஆம் உறுப்புரை, "சனாதிபதித் தேர்தலிலும்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. *அரசியலமைப்பின் 88 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

*அரசியலமைப் பின் 89 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**27.** அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரை, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “சனாதிபதிக்கான அல்லது” என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும்;

(2) அவ்வுறுப்புரையின் (உ) என்னும் பந்தியில், “சனாதிபதியின் அல்லது” என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றை விட்டுவிடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையின் (எ) என்னும் பந்தியில், “சனாதிபதியின் அல்லது” என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றை விட்டுவிடுவதன்மூலமும்;

*அரசியலமைப் பின் 92 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**28.** அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரை, அதன் (இ) என்னும் உட்பந்தியில், அத்துடன் அல்லது பாராளுமன்றத்தினால்” என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 93 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**29.** அரசியலமைப்பின் 93 ஆம் உறுப்புரை, “குடியரசின் சனாதிபதிக்கான தேர்தலிலும்,” என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 94 ஆம் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**30.** அரசியலமைப்பின் 94 ஆம் உறுப்புரை, இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 99 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**31.** அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(14) இவ்வுறுப்புரையின் (13) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால்

பாராளுமன்ற உறுப்பினரொருவராகவுள்ள அதன் உறுப்பினரொருவருக்கெதிராக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான ஏதேனும் கருமத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றமெதுவும் நியாயாதிக்கம் கொண்டிருத்தலாகாது என்பதுடன், அதற்கிணங்க நீதிமன்றமெதுவும் அத்தகைய ஏதேனும் நடவடிக்கையை அல்லது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையைத் தடுக்கின்ற, மட்டுப்படுத்துகின்ற அல்லது தடைசெய்கின்ற ஓர் எழுத்தாணையை, தடைக்கட்டளையை, கட்டாணையை அல்லது வேறேதேனும் நிவாரணத்தை வழங்குவதற்குத் தத்துவமுடையதாதலுமாகாது.”.

*அரசியலமைப்பின் 111இ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**32.** அரசியலமைப்பின் 111இ என்னும் உறுப்புரை, அதன் (2) ஆம் பந்தியில், “அல்லது குடியரசின் சனாதிபதிக்கான தேர்தல் எதிலும்” என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 129 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**33.** அரசியலமைப்பின் 129 ஆம் உறுப்புரையின் (1) ஆம், (4) ஆம் பந்திகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 130 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**34.** அரசியலமைப்பின் 130 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், “சனாதிபதியின் தேர்தல் பற்றிய அல்லது” என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலமும்;

(2) அதன் காப்புவாசகத்தில் “சனாதிபதியின் தேர்தல் பற்றிய அல்லது” என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

*அரசியலமைப் பின் 153 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**35.** அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) என்னும் பந்தியில், "அவர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தின்போது பதவிவகித்தலும் வேண்டும்." என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலமும்;

(ஆ) (3) ஆம் பந்தியின் (ஈ) என்னும் விடயத்தில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்து "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மேல்" என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலமும்.

*அரசியலமைப் பின் 156 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**36.** அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (2) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும்;

(ஆ) (4) ஆம் பந்தியின் (ஈ) என்னும் விடயத்தில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்து "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது" என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலமும்.

*நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

**37.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாம் எட்டாவது பாராளுமன்றம், முன்னரே கலைக்கப்பட்டாலொழிய, 2020, பெப்புருவரி 8 ஆந் தேதி வரை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் கலைக்கப்பட்டதாதலும் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று சனாதிபதி யாகப் பதவிவகிக்கின்ற ஆள், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, 2020, சனவரி 8 ஆந் தேதி வரை அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்;

(இ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று பிரதம அமைச்சராகப் பதவிவகிக்கின்ற ஆள், அத்தகைய தேதிக்குப் பின்னர், அப்போதைக்கு வலுவிலுள்ள அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான பாராளு மன்றப் பொதுத் தேர்தல் முடிவுறும்வரை அத்தகைய தேதிக்குப்பின்னர் அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2020 சனவரி 9 ஆந் நாளன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**38.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.